//மின்னஞ்சல்//

வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்: 3516 /ஆ4/ 2024 , நாள்.12.02.2025

– – –

பொருள் : தேர்வுகள் –மார்ச் 2025, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு மார்ச் 2025 +1 Arrear தேர்வர்களுக்கு செய்முறைத் தேர்வு நடத்துதல் – அறிவுரை வழங்குதல்– சார்பு.

பார்வை : சென்னை –06, அரசுத் தேர்வுகள் இயக்குனரின் செயல்முறைகள் ந.க.எண். 000045/ எச்1/2025 நாள் 04.02.2025

=========

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளின் படி 2024 கல்வியாண்டில் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுகளின் போது, செய்முறை புறத்தேர்வில் பங்கேற்காமல் தற்போது +2 பயிலும் பள்ளி மாணாக்கருக்கு (+1 Arrear candidates) செய்முறைத் தேர்வு நடத்துதல் தொடர்பாக பின்வரும் அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு சார்ந்த மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. பள்ளித் தலைமையாசிரியர்கள் 12.02.2025 பிற்பகல் முதல் www.dge.in.gov.in என்ற இணையதளத்தில், தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள UserID மற்றும் Password–ஐ பயன்படுத்தி, +1 Arrear தேர்வர்களுக்கு மேல்நிலை முதலாமாண்டு செய்முறைத் தேர்வுக்கான வெற்று மதிப்பெண் பட்டியல்களை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.
2. ஏற்கனவே 31.01.2025 அன்று செய்முறைத்தேர்வு சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தற்போது மேல்நிலை முதலாமாண்டு பயிலும் பள்ளி மாணாக்கருக்கான செய்முறைத் தேர்வு நடத்தப்படும் நாட்களிலேயே, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளின் போது, செய்முறை புறத்தேர்வில் பங்கேற்காத (Absent) கீழ்காணும் 2 வகை தேர்வர்களுக்கு செய்முறை புறத்தேர்வு நடத்தப்பட வேண்டும்.
   (i) தங்கள் பள்ளியில் +1 பயின்று, தற்போது +2 பயிலும் மாணவர்கள்.
   (ii) வேறொரு பள்ளியில்/ மாவட்டத்தில் +1 பயின்று. தற்போது தங்கள் பள்ளியில் +2 பயிலும் மாணவர்கள்.

3. வேறொரு பள்ளியில் / மாவட்டத்தில் +1 பயின்ற மாணவர்களது, சம்பந்தப்பட்ட பாடங்களின் செய்முறை பதிவேடுகளை (+1 Record Book) பள்ளித் தலைமையாசிரியர் பெற்றுக் கொண்டு, செய்முறை புறத்தேர்வு நடத்தி மதிப்பெண்கள் வழங்கும் சமயம், செய்முறை பதிவேடுகளுக்கான மதிப்பெண்களையும், திறன் மதிப்பீட்டுக்கான மதிப்பெண்களையும் (3+2) வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
4. இத்தேர்வர்களுக்கு செய்முறைத் தேர்வில் வழங்கப்பட்ட மதிப்பெண்களை பதிவு செய்த மதிப்பெண் பட்டியல்களை தனி கட்டுக்களாக கட்டி அவற்றை வேலூர் காட்பாடி ,அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் செய்முறைத்தேர்வு முடிந்த அன்றைய தினமே ஒப்படைக்கவேண்டும்.

**//ஒம்.செ.மணிமொழி//**
**முதன்மைக் கல்வி அலுவலர் ,**
**வேலூர் .**

பெறுநர் ,

- அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் பள்ளிகள்) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி ) தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.